Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 36 | உள்ளூர் - 05.02.2026 | வியாழன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 54 | * Issue 36 | வெளியூர் - 06.02.2026 | வெள்ளி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

வங்கி கடன், EMI பிரச்சனைகளை தீர்க்க வாஸ்து!

தோல் ஆராய்ச்சி நிறுவனம் –காலிப்பணியிடங்கள்!

கூட்டுறவு வங்கியில் தள்ளுபடியா? கடன் ஆர்வம்?

அரசின் “ பாரத் கால் டாக்ஸி “அறிமுகம்

## கச்சா எண்ணெய் விவகாரத்தில் இந்தியாவுக்கு முழு சுதந்திரம் உள்ளது: ரஷ்யா!

மாஸ்கோ, பிப். 05–

“உலக நாடுகளில் எங்கிருந்து வேண்டுமானாலும் தங்களுக்கு தேவையான கச்சா எண்ணெயை இந்தியா பெறுவதற்கான முழு சுதந்திரம் உள்ளது” என ரஷ்யா தெரிவித்துள்ளது.



இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், இந்தியா இனி ரஷ்ய கச்சா எண்ணெயை வாங்காது என அமெரிக்க தரப்பு தெரிவித்து வருகிறது. இத்தகைய சூழலில் இந்த விவகாரம் தொடர்பாக புதன்கிழமை அன்று ரஷ்ய செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறியதாவது: “இந்தியாவுக்கு தேவையான கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியம் பொருட்களை ரஷ்யா மட்டுமே தனியொரு தேசமாக விநியோகிக்கவில்லை. இதை ரஷ்யா உட்பட உலக அளவில் எண்ணெய் வளம் மிக்க சர்வதேச நாடுகள் நன்கு அறியும்.

ஏனெனில் இந்தியா பல்வேறு நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் வாங்கி வருகிறது. அதனால் இதில் புதிது எதுவும் இல்லை என நாங்கள் பார்க்கிறோம். உலக நாடுகளில் எங்கிருந்து வேண்டுமானாலும் தங்களுக்கு தேவையான கச்சா எண்ணெயை இந்தியா பெறுவதற்கான முழு சுதந்திரம் உள்ளது” என அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா திட்டவட்டம்: இந்தியப் பொருட்களுக்கான இறக்குமதி வரி 18 சதவீதமாக குறைக்கப்படும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அண்மையில் அறிவித்தார்.

இந்நிலையில், வெள்ளை மாளிகை ஊடகச் செயலர் கரோலின் லீவிட் செய்தியாளர்களிடம் கூறியதாவது:


இந்தியா, அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது. இதை ஒரு மிகப்பெரிய வெற்றியாக அமெரிக்கா பார்க்கிறது. இதைத் தொடர்ந்து ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெயை வாங்குவதில்லை என இந்தியா உறுதி அளித்துள்ளது.

மேலும், அமெரிக்கா, வெனிசுலா நாடுகளிடமிருந்து இனி கச்சா எண்ணெயை இந்தியா வாங்கும். ரஷ்யாவிடமிருந்து வாங்கப்படும் கச்சா எண்ணெயை நிறுத்துவதோடு மட்டுமல்லாமல் அமெரிக்க பொருட்களை இறக்குமதி செய்யும் எண்ணிக்கையை அதிகரிக்கவும் இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது. வெனிசுலாவிடமிருந்தும் இந்தியா, கச்சா எண்ணெயை வாங்க முடியும். இதனால் அமெரிக்க பொருளாதாரம் மேலும் பலன் அடையும். இந்தியாவுடன் மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தத்தை அதிபர் ட்ரம்ப் இறுதி செய்துள்ளார். இதற்காக இந்தியப் பிரதமர் மோடியுடன் அவர் நேரடியாகவே பேசி உள்ளார்.

மேலும், அமெரிக்க எரிசக்தி, போக்குவரத்து மற்றும் விவசாயப் பொருட்களை வாங்குவதற்காக இந்தியா 500 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவுக்கு செலவிடவுள்ளது என்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னை, கலைவாணர் அரங்கில், தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்கள் மற்றும் கைவினைஞர்களின் திறனை உலக அளவில் பிரபலப்படுத்தும் விதமாக மாபெரும் கைவினைப் பொருட்கள் கண்காட்சியை திறந்து வைத்தார். இவ்விழாவில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் வே. அமுதவல்லி, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் ச. அமிர்த ஜோதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் திருவுருவச் சிலை சென்னை, கலைவாணர் அரங்க வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு, மாற்றி நிறுவப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் விஜயா தாயன்பன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், என்.எஸ். கிருஷ்ணன் குடும்பத்தினர், நடிகை செல்வி குமாரி சச்சு, நடிகர்கள் நாசர், கருணாஸ், சரவணன், போஸ் வெங்கட் உள்ளிட்ட திரைத்துறையை சார்ந்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பிப். 28–ல் மீண்டும் பிரதமர் தமிழகம் வருகை

## பிரமாண்ட பொதுக்கூட்டம் திருப்பரங்குன்றம் தரிசனம்

### மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை திறப்பு?

மதுரை, பிப். 05–

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் இன்னும் 3 மாதங்களுக்குள் நடைபெற உள்ளது.

இதனால், அரசியல் களம் தகதகவென தகிக்க தொடங்கி உள்ளது. ஆட்சி தக்க வைக்க திமுக வியூகம் வகுத்து வருகிறது. அதே வேளையில் ஆட்சியை கைப்பற்ற அதிமுக கூட்டணி, தவெக போன்ற கட்சிகள் களமாடி வருகின்றன.




இந்த நிலையில், மதுரையில் பிப்ரவரி 28ந்தேதி அதிமுக பாஜக தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் அரசியல் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இதில், பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ள இருப்பதாக தகவல்கள் வெளியானது. இந்த நிலையில், அன்றைய தினம், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை பிரதமர் மோடி திறந்து வைக்கவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னதாக அவர் திருப்பரங்குன்றம் முருகனை தரிசனம் செய்துவிட்டு பின்பு பொதுக் கூட்டத்தில் உரையாற்ற உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு 2019ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னதாக அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெறாமல் இருந்து வந்தது. இதுதொடர்பான கடுமையான விமர்சனங்கள் எழுந்த நிலையில், பிரச்சினைகள் முடிக்கப்பட்டு கடந்த 2024, மே 22இல் கட்டுமானப் பணிகள் தொடங்கின. அதன்படி, மதுரையில் ரூ.2021 கோடி ரூபாய் மதிப்பில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. முதற்கட்ட பணிகள் முடிந்துள்ள நிலையில் முழு கட்டுமானப் பணியையும் பிப்ரவரி 2027க்குள் முடிக்கத் திட்டமிட்டுள்ளன.

## முதல்மைச்சர் தலைமையில் தமிழக அமைச்சரவை கூட்டம்!

சென்னை, பிப். 05–

தமிழக சட்டசபை கூட்டத்தொடர் கடந்த மாதம் 20–ந்தேதி தொடங்கி 24–ந்தேதிவரை நடைபெற்றது. அதன் பிறகு தேதி குறிப்பிடாமல் அவை ஒத்திவைக்கப்பட்டது.




இந்த மாதம் தமிழக அரசின் பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட வேண்டும். தமிழகத்தில் வரும் ஏப்ரல் மாதத்தில் சட்டசபைத் தேர்தல் நடைபெற உள்ளது. எனவே தற்போது சட்டசபையில் இடைக்கால பட்ஜெட் மட்டுமே தாக்கல் செய்யப்படும். சட்டசபையில் பட்ஜெட் கூட்டத்தொடர் விரைவில் தொடங்க உள்ளது. கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பு அமைச்சரவை கூடி விவாதிப்பது வழக்கம்.

இந்நிலையில் தமிழக அமைச்சரவை கூட்டம் தொடங்கியது. சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை கூட்டம் தொடங்கியது. கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களும் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் இடைக்கால பட்ஜெட்டில் இடம் பெறும் புதிய திட்டங்கள், அதற்கான செலவுகள், ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் அரசு நலத்திட்டங்களுக்கான தொடர் செலவுகள், தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ஆகியவை பற்றி ஆலோசிக்கப்பட்டது.

## மக்கள் மனதில் பாகுபாடுகளை போக்காமல் தெருக்கள் பெயரை மாற்றுவதால் பலனில்லை: மதுரை ஐகோர்ட்டு!

மதுரை, பிப். 06–

மதுரை மேல அனுப்பானடி பகுதியை சேர்ந்த பரமசிவம், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், சமீபத்தில் தமிழகத்தில் உள்ள குடியிருப்பு பகுதிகள், தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள் மற்றும் பிற பொது நிறுவனங்களின் பெயர்களில் உள்ள சாதி பெயர்களை நீக்குவது தொடர்பாக தமிழக அரசு உத்தரவிட்டது. வருகிற சட்டமன்ற தேர்தலை மனதில் வைத்து ஆளுங்கட்சி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.



இவ்வாறு தெருக்கள், சாலைகளின் பெயர்களை மாற்றுவதால் அப்பகுதியில் வசிப்பவர்கள் இருப்பிட சான்றுகளில் முகவரியை பயன்படுத்துவதில் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தும். எனவே குடியிருப்பு பகுதி, சாலைகள், தெருக்களின் சாதி பெயர்களை நீக்குவதற்கான அரசாணையை ரத்து செய்ய வேண்டும் என கூறியிருந்தார்.

ஏற்கனவே இது தொடர்பான விசாரணை நடந்தபோது, இந்த வழக்கில் இறுதி முடிவு எடுக்கும் வரை பழைய பெயர்களை நீக்குவது, புதிய பெயர்களை அமல்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை எடுக்கக்கூடாது என நீதிபதிகள் உத்தரவிட்டு இருந்தனர். இந்த நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் ஜெயச்சந்திரன், ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், மக்களின் மனதில் பல்வேறு பாகுபாடு உள்ளது.

அவற்றையெல்லாம் போக்காமல் தெருக்களின் பெயரை மாற்றுவதால் எந்த பலனும் இல்லை என்றனர். பின்னர் அரசு வக்கீல் ஆஜராகி, முதல் கட்டமாகத்தான் இந்த முயற்சி எடுக்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் மக்களின் மனதிலும் மாற்றம் வரும் என்றார். இதையடுத்து இந்த வழக்கில் தங்கள் தரப்பு கருத்துகளை தெரிவிக்க மனுதாரர் தரப்பில் அவகாசம் கோரப்பட்டது. இதனால் இந்த வழக்கு விசாரணையை வருகிற 9–ந்தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# தலையங்கம்

மதுரை மணி
வியாழக்கிழமை 05.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
தை மாதம் 22-ம் தேதி

## ரத்த வெள்ளத்தில் இந்திய ஐடி நிறுவன பங்குகள்..




இந்திய ஐடி நிறுவனங்களின் பங்குகள் பிப்ரவரி 4 அன்று கடுமையான சரிவை சந்தித்தன. அமெரிக்க AI நிறுவனமான அன்த்ரோபிக் தனது கிளவுட் AI சாட்பாட்டுக்கு புதிய சட்ட ப்ளக்கின்–களை அறிமுகப்படுத்தியதால், சாஃப்ட்வேர் மற்றும் SAAS நிறுவனங்களுக்கான நெருக்கடி அதிகரிக்கும் என்ற அச்சம் எழுந்தது. இதனால் பிப்ரவரி 3ல், அமெரிக்க வால் ஸ்ட்ரீட் சந்தையில் டெக் பங்குகள் சரிந்ததால் பிப்ரவரி 4ல்இந்திய ஐடி பங்குகளும் பெரும் சரிவை பதிவு செய்தது.

இன்றைய வர்த்தகத்தில் நிஃப்டி ஐடி குறியீடு 7 சதவீதத்திற்கு மேல் சரிந்தது. இது மார்ச் 2020 கொரோனா காலத்திற்கு பிறகு ஐடி பங்குகள் எதிர்கொண்ட மிகப்பெரிய ஒரு நாள் சரிவாகும். சாட்ஜிபிடி அறிமுகம் செய்யும் போது கூட ஐடி பங்குகள் இந்த அளவுக்கான சரிவை பதிவு செய்யவில்லை. இன்றைய வர்த்தகத்தில் இன்போசிஸ் மற்றும் எல்டிஐ மைண்ட்ட்ரீ பங்குகள் தலா 8 சதவீதத்திற்கு மேல் சரிந்தன. கோஃபோர்ஜ் 8 சதவீதம், பெர்சிஸ்டென்ட் சிஸ்டம்ஸ், எம்ஃபேசிஸ், டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) ஆகியவை தலா 7 சதவீதம் சரிந்தன. டெக் மஹிந்திரா மற்றும் எச்சிஎல் டெக்னாலஜிஸ் 6 சதவீதம், விப்ரோ 5 சதவீதம் இழந்தன.

இதனால் இந்தியாவின் முன்னணி ஐடி நிறுவனங்களின் மொத்த சந்தை மதிப்பு சுமார்வ ரூ.2 லட்சம் கோடி குறைந்தது. அமெரிக்கா–இந்திய வர்த்தக ஒப்பந்தத்தால் ஏற்பட்ட பங்கு உயர்வு தொடர்வது கடினம். அமெரிக்க டெக் பங்குகள் சரிவால் இந்திய ஐடி குறியீடு மொத்த பங்குச்சந்தையை சரிவுக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளது. ஐடி பங்குகள் மதிப்பீடு அதிகமாக உள்ளதால் நீண்டகால உயர்வுக்கு அடிப்படை ஆதரவு இல்லை என்பதால் சரிவை கட்டுப்படுத்த முடியவில்லை.

அன்த்ரோபிக் கடந்த வாரம் கிளவுட் கோவொர்க் AIக்கு சட்டம், விற்பனை, மார்க்கெட்டிங், தரவு பகுப்பாய்வு உள்ளிட்ட பணிகளை தானாக செய்யும் 11 ப்ளகின்களை வெளியிட்டது. இது ஐடி சேவை நிறுவனங்களின் நீண்ட கால வர்த்தக மாடலை அசைத்து பாத்துள்ளது

நிஃப்டி ஐடி சரிவு என்பது குறுகிய கால பிரச்சனை அல்ல, ஐடித்துறையின் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றம்.AI தொழில்நுட்பம் அதிகளவில் தொழிலாளர்களை சார்ந்து இருப்பதை குறைத்து வருகிறது. இதனால் ஐடி வேலைவாய்ப்புகளும் மாற்றி வருகிறது. பெரிய ஐடி நிறுவனங்கள் பல ஆண்டுகளாக செய்ய வேண்டிய பணிகளை இத்தகைய ஏஜ ப்ளகின்கள் மற்றும் ஏஐ சேவைகள் மூலம் ஒரு சில வாரங்களில் முடிக்கிறது. இது நேரம், செலவு, தொழிலாளர் தேவையை என அனைத்தையும் குறைக்கிறது.

இதனால் சேவை அடிப்படையிலான ஐடி துறையின் வர்த்தக மாடலுக்கு பெரும் ஆபாத்தாக மாறுகிறது. இந்த மாற்றத்தால் தற்போது ஐடி நிறுவனங்களின் லாப அளவுகள் குறைக்கிறது, பில்லபிள் நேரத்தை குறைக்கிறது, தொடக்க நிலை வேலைகளை குறைக்கிறது. ஆனால் ஏஐ தொழில்நுட்பத்திற்கு ஒரு நல்ல பக்கமும் உள்ளது. பொருளாதார நிச்சயமின்மை அதிகரிக்கும் போது, நிதி நெருக்கடியால் தவிக்கும் நிறுவனங்கள் AI தொழில்நுட்பத்தை வேகமாகவும், அதிமாகவும் பயன்படுத்த துவங்கியுள்ளது. இதனால் செலவு குறைப்பு நடப்பது மட்டும் அல்லாமல் எதிர்பார்க்கக்கூடிய பலன்களும், திறன்களும் ஒரு நிறுவனத்திற்கு கிடைக்கிறது. இதனால் நிறுவனத்தை மூடும் அளவுக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. மேலும் ஏஜ மூலம் நிறுவனத்தில் நீண்டகால இயக்க திறனை உருவாக்க முடியும் என்பதால் நிறுவனங்கள் AI–யில் அதிகளவில் முதலீடு செய்கின்றன. AI தளங்கள் இனி வரும் காலத்தில் ஆப்ஷனாக இருக்கப்போவது இல்லை, அவசியமாகிறது.

# இந்தித் திணிப்புக் கிருமியைக் கட்டுப்படுத்தியாக வேண்டும்- கனிமொழி எம்.பி.!




விருதுநகர், பிப். 05–

விருதுநகர் மாவட்டம் சிவகாசி தொழில் நகரமாகும். பட்டாசு, தீப்பெட்டி, அச்சு தொழில்கள் அதிக அளவில் நடைபெற்று வருகிறது. எனவே ஏராளமானோர் தினமும் சிவகாசிக்கு வந்து செல்கின்றனர். இந்தியா முழுவதும் இருந்து வர்த்தகர்களும், தொழிலாளர்களும் சிவகாசிக்கு வந்து செல்லும் நிலையில் இங்குள்ள ரெயில் நிலையம் போதிய வசதிகள் இன்றி இருக்கிறது.

ரெயில் நிலையத்தை தரம் உயர்த்த மாணிக்கம்தாகூர் எம்.பி. பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வருகிறார். சில வாரங்களாக ரெயில் நிலையத்தில் பராமரிப்பு பணி நடைபெற்று வருகிறது.

இதில் நடைமேடையில் வைக்கப்பட்டுள்ள பெயர் பலகையில் தமிழை விட இந்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டு இருந்தது. இதுகுறித்து நடவடிக்கை எடுத்து தமிழுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என ரெயில் பயணிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு, தி.மு.க. துணை பொதுச்செயலாளரும், எம்.பியுமான கனிமொழி கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

நோய்த்தொற்றைப் போல ஊரெங்கும் பரவிடும் இந்த இந்தித் திணிப்புக் கிருமியைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். சென்னை பூங்கா ரெயில் நிலையத்தைத் தொடர்ந்து தற்போது சிவகாசியிலும் இந்தியை முதன்மைப்படுத்தி பெயர்ப்பலகை வைக்கப்பட்டுள்ளது என கூறியுள்ளார்.

# திருச்செந்தூர் கோவிலில் 2-வது நாளாக ஓ.பன்னீர்செல்வம் சாமி தரிசனம்!



திருச்செந்தூர், பிப். 05–

முன்னாள் முதலமைச்சரும், அ.தி.மு.க. உரிமை மீட்பு குழு தலைவருமான ஓ.பன்னீர்செல்வம் நேற்று மாலை திருச்செந்தூர் சுப்பிரமணியசாமி கோவிலுக்கு வந்தார்.

அங்கு அவர் சுவாமி மூலவர், சண்முகர், வள்ளி, தெய்வானை தட்சணாமூர்த்தி சன்னதிகளில் சுவாமி தரிசனம் செய்தார். தரிசனம் முடித்து வெளியே வந்த அவர், கோவில் வாசலில் உள்ள டீக்கடையில் டீ அருந்தினார். பின்னர் விருந்தினர் மாளிகை செல்லும் வழியில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவரிடம் சுவாமி தரிசனம் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு உலக மக்கள் நலனுக்காக வேண்டி கொண்டேன் என்றார்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என கூறினீர்களே? என்ற கேள்விக்கு பதில் அளித்த அவர், தை முடிய இன்னும் 10 நாட்கள் உள்ளன என்றார். பின்னர் அங்குள்ள தனியார் விடுதியில் தங்கினார்.

ஓ.பன்னீர் செல்வம் திருச்செந்தூர் வருகையை அறிந்ததும் அவரது ஆதரவாளர்கள் ஏராளமானோர் கோவில் வளாகத்தில் குவிந்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. 2–வது நாளாக இன்று காலை திருச்செந்தூர் கோவிலில் ஓ.பன்னீர் செல்வம் சாமி தரிசனம் செய்தார்.

# போயிங் BUILD திட்டத்தின் 5-வது பதிப்பிற்கான விண்ணப்பங்கள் தொடக்கம்; மாணவர் புதுமையாளர்கள் மற்றும் ஸ்டார்ட்அப் களுக்கு அழைப்பு




சென்னை, பிப். 05–

போயிங் [NYSE: BA], 202526 காலத்திற்கான Boeing University Innovation Leadership Development (BUILD) திட்டத்தின் ஐந்தாவது பதிப்பிற்கான விண்ணப்பங்களை தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது. 2019 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டம், இந்தியா முழுவதும் உள்ள மாணவர் புதுமையாளர்கள் மற்றும் தொடக்க நிலை ஸ்டார்ட்அப் களுக்கு தங்கள் யோசனைகளை இன்குபேட்டர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் போயிங்கின் தொழில்துறை நிபுணர்களுடன் இணைத்து, சந்தைக்கு தயாரான தீர்வுகளாக மாற்றும் ஒரு முக்கிய மேடையாக வளர்ந்துள்ளது. போயிங்கின் மாநில ஆதரவு மற்றும் உலகளாவிய ஈடுபாடு துறையின் துணைத் தலைவர் பில் மிகெஷர் கூறுகையில், “மாணவர்களும் தொழில்முனைவோர்கள் கொண்ட யோசனைகளை நடைமுறை தீர்வுகளாக மாற்ற BUILD ஒரு நிரூபிக்கப்பட்ட தளமாக உள்ளது. இந்த திட்டம் எடுக்க உள்ள அடுத்த உயர்ந்த பாய்ச்சலுக்கு ஆதரவளிப்பதாக பெருமைப்படுகிறோம்,” என்றார். போயிங் இந்தியா மற்றும் தெற்காசியாவின் தலைவர் சலில் குப்தா கூறுகையில்,

“இந்தியாவின் ஸ்டார்ட்அப் சமூகத்தில் உள்ள தைரியமான சிந்தனையும் தொழில்நுட்ப திறனையும் BUILD ஊக்குவித்து வருகிறது,” என்றார். தேர்ந்தெடுக்கப்படும் அணிகள் பிராந்திய பூட் கேம்பிலும், 2026 ஜூலை மாதத்தில் நடைபெறும் Boeing Immersion Day மற்றும் BUILD இறுதிப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பு பெறுகின்றன. வெற்றி பெற்ற அணிகளுக்கு தலா ரூ.10 லட்சம் மானியம் வழங்கப்படும். ஆர்வமுள்ள வர்கள் ஏப்ரல் 4, 2026க்குள் விண்ணப்பிக்கலாம்.

# ICL Fincorp நிறுவனத்தின் புதிய NCD வெளியீடு 2026 பிப்ரவரி 5 ஆம் தேதி தொடங்குகிறது: அதிகபட்சமாக 12. 25% வரை வருமானத்தை வழங்க கூடியது

சென்னை, பிப். 05–

ICL Fincorp நிறுவனம் பிப்ரவரி 5 ஆம் தேதி பாதுகாப்பு கொண்ட மீட்கத்தக்க மாற்ற முடியாத கடன் பத்திரங்கள் (Secured Redeemable Non– Convertible Debenture–NCDS) என்ற தனது புதிய பொது வெளியீட்டை (New Public issue) அறிமுகபடுத்து வதில் பெருமை கொள்கிறது அதிகபட்சமாக 12.25% வரை பயனளிக்கும் வருமானத்துடன் மாற்றக்கூடிய முதலீட்டு கால அவகசங்களை (Flexible tenures) நாடும் முதலீட்டாளர்கள் பாதுகாப்பான மற்றும் கவரக்கூடிய முதலீட்டு வாய்ப்பாகும்





இந்த NCD வெளியிட்டில் 2026 பிப்ரவரி 18 தேதி வரை முதலீடு செய்யலாம் மற்றும் இதற்குCRISILBBB–/Stable என்ற மதிப்பீடு வழங்கபட்டுள்ளது ஒவ்வொரு NCD யின் முகப்பு மதிப்பு ரூபாய் 1000 ஆகும் ஆகும் மொத்தம் 10 தேர்வுகள் (10 ISIN–கள் ) வழங்கப்படுகின்றன 13, 24 ,36 ,60 மற்றும் 72 மாத கால அவகாசங்களுக்கு மாதாந்திரம் வருடாந்திர மற்றும் கூட்டு (Cumulative) வட்டிக்கான வாய்ப்புகள் உள்ளன வட்டி விகிதம் 10,000% முதல் 12.25% வரை இருக்கும் குறைந்தபட்ச விண்ணப்பத் தொகை 10,000 ஆக இருப்பதால் பல்வேறு வகையான முதலீட்டாளர்களுக்கு எளிதாக அணுக்கக்கூடியதாகும் 34 ஆண்டு சிறப்பான பாரம்பரியத்துடன் CMD ADV ,K.G அனில் குமார் அவர்களின் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமையின் கீழ் ICL Fincorp நம்பகமான நிதி துணைவராக தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது. ICL Fincorp நிறுவனம் தங்க கடன், ஹையர் பர்சேஸ் கடன் வணிக கடன் உள்ளிட்ட பல்வேறு சேவை களை உள்ளடக்கி முழுமையாக நிதி சேவைகளை வழங்குகிறது. CMD ADV ,K.G அனில் குமார் மற்றும் முழு நேர இயக்குனர் திருமதி உமாதேவி அணில் குமார் ஆகியோரின் இணைந்த தலைமையின் ICL Fincorp இந்திய ரிசர்வ் வங்கியின் முழுமையாக உட்பட்டு செயல்பட்டு வருவதுடன் வாடிக்கையாளரின் நிலையான நம்பிக்கையை பெற்றுள்ளது.

# சினிமா துளிகள்..!


## லெஜெண்ட் சரவணனின் புதிய படத்தின் பெயர் லீடர்!




லெஜெண்ட் சரவணா ஸ்டோர்ஸ் புரொடக்ஷன்ஸ் பேனரில் பிரம்மாண்ட பட்ஜெட்டில் லெஜெண்ட் சரவணன் நாயகனாக நடிக்கும் புதிய படத்திற்கு ‘லீடர்’ என்று பெயரிடப்பட்டுள்ளது. ‘எதிர்நீச்சல்’, ‘காக்கி சட்டை’, ‘கொடி’, ‘பட்டாஸ்’, ‘கருடன்’ ஆகிய படங்களை இயக்கி தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குநர்களில் ஒருவராக உள்ள R.S. துரை செந்தில்குமார் எழுத்து, இயக்கத்தில் உருவாகியுள்ள ‘லீடர்’ படத்தை விரைவில் திரைக்கு கொண்டுவருவதற்கான பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.



# வங்கி கடன், EMI பிரச்சனைகளை தீர்க்க உதவும் வாஸ்து சாஸ்திரம்!



சொந்த தேவை அல்லது குடும்பத்தின் தேவைக்காக நாம் வாங்கும் வங்கி கடன்கள், உண்மையில் நம் முன்னேற்றத்தை தடுக்கும் ஒரு விஷயமாக பார்க்கப்படுகிறது. நம் வாழ்க்கையில் முன்னேற்றம் காண – குறிப்பாக, தொழில் வாழ்க்கையில் வளர்ச்சியடைய இந்த வங்கி கடன்களை முடிந்தளவுக்கு விரைவாக முடிப்பது அவசியம் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

வங்கி கடன் மற்றும் EMI பிரச்சனைகளை தீர்க்க நிதி மேலாண்மையில் கவனம் செலுத்துவது அவசியம். அதேநேரம், உங்கள் சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக இருப்பதும் அவசியம். ஆம், சூழ்நிலைகளை உங்களுக்கு சாதகமாக மாற்றி, வங்கி கடன் மற்றும் EMI பிரச்சனைகளை தீர்க்க ஒரு சில வாஸ்து குறிப்புகள் உதவும் எனவும், பரிகாரங்கள் செய்வதன் மூலம் நம் வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு செல்ல முடியும் எனவும் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**வடக்கு திசையை சுத்தமாக வையுங்கள்!**

வங்கி கடன் பிரச்சனைகளை தீர்க்கவும் உங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் வீட்டின் வடக்கு திசையை சுத்தமாக வைப்பது அவசியம். காரணம், வீட்டின் வடக்கு திசையானது குபேரனின் திசை என குறிக்கப்படுகிறது. பண வரவை அதிகரிக்கும் ஒரு நபராக குபேரன் பார்க்கப்படுகிறார். உங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்தும் ஒரு நபராகவும் அவர் பார்க்கப்படுகிறார்.

அந்த வகையில் உங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், வருமானத்தை அதிகரிக்கவும் குபேர மூலையை சுத்தமாக வைப்பது அவசியம் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். முடிந்தளவுக்கு இங்கு காலணிகளை விடுவது கூடாது, குப்பைகளை குவித்து வைப்பதும் கூடாது.

வீட்டை சுத்தம் செய்ய உதவும் துடைப்பம், குப்பைத்தொட்டி, நீர் தேக்க தொட்டி போன்றவற்றை வைப்பது கூடாது. முடிந்தளவுக்கு இன்று லட்சுமி மற்றும் விநாயகரின் புகைப்படம் வைத்து வழிப்பட்டு வரலாம். அதேப்போன்று, தினமும்காலை இங்கு நெய் விளக்கு ஏற்றி வழிபட்டு வரலாம்!

**நுழைவாயிலில் ஓம் சின்னம்!**

பிராதான நுழைவாயிலில் ஓம் சின்னத்தை வரைந்து வைப்பதன் மூலம், உங்கள் வீட்டில் பண வரவை அதிகரிக்கலாம். குறிப்பாக, தொழில் வளர்ச்சிக்கு தேவையான விஷயங்களை உருவாக்கலாம், பிரகாசமான எதிர்காலத்தை கட்டமைக்கலாம். கடன் பிரச்சனைகள் முடிவுக்கு வரும், உங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும் உங்களுக்கு கிடைக்கும்.

வீட்டின் நுழைவாயில் அல்லது கதவில் ஓம் சின்னத்தை வரைவது எதிர்மறை ஆற்றலை குறைக்கும், நேர்மறை ஆற்றலை அதிகரிக்கும். குறைந்தது, வீட்டின் பிரதான கதவில் திருஷ்டி விநாயகர் புகைப்படத்தை ஒட்டுவது நல்லது என வாஸ்து சாஸ்திர நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். அதேப்போன்று, வீட்டின் நுழைவாயிலுக்கு மேல் பகுதியில் எலுமிச்சை மற்றும் பச்சை மிளகாய் கொண்டு தயார் செய்யப்படும் திருஷ்டி பொருளை, கட்டி தொங்க விடுவதும் நல்லது என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**தென்மேற்கு மூலையை வலுப்படுத்துங்கள்!**

வீட்டின் தென்மேற்கு திசையானது நிலைத்தன்மை மற்றும் வலிமையை குறிக்கிறது. இந்த திசையில் லேசான பொருட்களை வைப்பது அல்லது காலியாக விடுவது, உங்கள் பொருளாதார நிலையை பலவீனப்படுத்தும், வீட்டில் பண தேக்கத்தை குறைக்கும். கடன் பிரச்சனைகளை மேலும் அதிகரிக்கும். வங்கி கடன் பிரச்சனைகளில் இருந்து தப்பிக்க, இந்த மூலையில் கனமான பொருட்களை வைத்திடுங்கள.

கனமான பொருட்கள் எனில், இரும்பு அலமாரிகள், கனமான தளபாடங்கள், கனமான மேசை போன்றவற்றை பயன்படுத்தலாம். இதை தவிர்த்து சிவப்பு அல்லது மஞ்சள் நிறத்தில் பொருட்களை இங்கு வைக்கலாம். இதனுடன் ஹனுமன் அல்லது சனி பகவான் புகைப்படத்தை பயன்படுத்தலாம் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். சனிக்கிழமை தோறும் ஹனுமன் மந்திரத்தை உச்சரிப்பதன் மூலமும் உங்கள் கடன் பிரச்சனைகளை தீர்த்து, பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளலாம்!

**வடகிழக்கு திசையில் நீர்!**

வீட்டின் வடகிழக்கு திசையானது நீர் மூலகத்தின் திசையாகும். இந்த பகுதியில் நீர் பயன்பாட்டு விஷயங்களை அதிகரிக்கலாம்,நீருக்கான இடத்தை அதிகரிக்கலாம். குறித்த இந்த பகுதியில் நீரை வைப்பது, செல்வத்தை ஈர்க்கிறது, உங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்துகிறது. நிபுணர்கள் கூற்றுப்படி இந்த திசையில் நீர் பானை ஒன்றை வைப்பது நல்லது.

நீருற்று அல்லது சிறிய மீன் தொட்டியை வைப்பதும் நல்லது. முடிந்தளவுக்கு இங்கு குப்பைகள் அல்லது கனமான பொருட்களை சேமித்து வைக்க வேண்டாம். உங்கள் கடன் பிரச்சனைகளை தீர்க்கவும், உங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் இங்கு சிவலிங்கம் அல்லது விஷ்ணுவின் படத்தைமாட்டி வைக்கலாம்.பணப்புழக்கத்தை அதிகரிக்க சிவ நாமத்தை தினமும் உச்சரித்து வரலாம்.

**உப்பு, எலுமிச்சை பரிகாரம்!**

கடன் பிரச்சனைகளில் இருந்து விடுபடவும், உங்கள் திருமண தடை தொடர்பான விஷயங்களில் இருந்து விடுபடவும் உப்பு, எலுமிச்சை பரிகாரத்தை செய்து வரலாம். அதாவது, வீட்டில் இருக்கும் ஒவ்வொரு அறையிலும், மூலையில் ஒரு கிண்ணத்தை வைத்து அதில் கடல் உப்பை வைத்து வாரம் ஒரு முறை மாற்றி வர வேண்டும். அதேப்போன்று வீட்டின் பிரதான வாசல் உட்பட அனைத்து வாசலிலும் எலுமிச்சை பழத்தை இரண்டாக நறுக்கி, குங்குமம் தடவி பக்கவாட்டில் பார்த்தபடி வைப்பது நல்லது.

இவ்வாறு செய்து வருவதன் மூலம் ராகு, கேது மற்றும் சனி பகவானின் தாக்கத்தை குறைக்கலாம். உங்கள் கடன் பிரச்சனைகளில் இருந்தும் விடுபடலாம்.

இதை தவிர்த்து புதன் கிழமை தோறும் விநாயகர் கோவில் சென்று, நீர் அபிசேகம் செய்து முறையாக வழிபட்டு வர உங்கள் கடன் பிரச்சனைகளில் இருந்து தப்பிக்கலாம் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

# தமிழகத்தில் புற்றுநோய் பாதிப்பு ஒரு லட்சத்தைத் தாண்டியது!

சென்னை, பிப். 05–

தமிழகத்தில் கடந்த ஆண்டு புற்றுநோய் பாதித்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்துள்ளதாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் புற்றுநோய் பாதிப்பு குறித்து மத்திய சுகாதாரத்துறை மற்றும் குடும்ப நல அமைச்சகம் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. அதன்படி, தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு புற்றுநோய் பாதிப்பு முதல்முறையாக ஓராண்டில் ஒரு லட்சத்தைக் கடந்துள்ளது.

2025 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 1,00,097 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்கள் 53,542 பேர், ஆண்கள் 46,555 பேர்.

பாதிப்பு கடந்த 2020–ல் 68,750, 2021–ல் 76,968 ஆகவும், 2022–ல் 89,265 ஆகவும், 2023–ல் 92,816 ஆகவும், 2024–ல் 96,486 ஆகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. பெண்கள் அதிகமாக மார்பக புற்றுநோய், கருப்பைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்கள், வாய்ப்புற்றுநோய், பெருங்குடல் மற்றும் வயிற்றுப் புற்றுநோய்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

அதிகபட்சமாக சென்னையில் 8,505 பேருக்கு புற்றுநோய் பாதிப்பு உறுதியாகியுள்ளது. அடுத்து காஞ்சிபுரத்தில் 7,295 பேருக்கும் வேலூரில் 6,525 பேருக்கும் உறுதியாகியுள்ளது. புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு மற்றும் நோய் கண்டறிதலையும் அதற்கான சிகிச்சை முறைகளையும் தீவிரப்படுத்த வேண்டும் என்று சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில் 14 வயதுடைய பள்ளி மாணவிகளுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




தமிழக அரசால் மதுரை பாண்டி கோவில் அருகில் உள்ள பாப்பிஸ் விடுதியில் இன்று நடத்தப்பெற்ற “என் ஊர் என் கனவு” நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சிக்கு பாடுபட்டு வரும் தன்னார்வலர்களுக்கு வழங்கப்பெற்ற நினைவுப் பரிசுகளுடன் மதுரை தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குனர் திருமிகு சுசீலா அவர்களிடம் வாழ்த்துக்கள் பெற்ற மகிழ்ச்சி நிறைந்த தருணம். இடமிருந்து கவிக்குயில் கணேசன், ஆதிரை சசாங்கன், சூரியா, பார்த்தசாரதி ஆகியோர் உள்ளனர்.




## இந்த 5 பொதுவான பழக்கங்கள் புற்றுநோயை ஏற்படுத்தலாம்..!




உலகம் முழுவதும் புற்றுநோய் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில் புற்றுநோய் பெருந்தொற்று எப்படி ஏற்படுகிறது? புற்றுநோய்க்கு வழிவகுக்கும் காரணிகள் மற்றும் காரணங்களைப் பற்றி அறிந்துகொள்வது அவசியம். அதனால்தான், ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 4 ஆம் தேதி உலக புற்றுநோய் தினம் கொண்டாடப்படுகிறது.

புற்றுநோய்க்கான காரணங்கள், அறிகுறிகள், தடுப்பு முறைகள் மற்றும் சரியான நேரத்தில் சிகிச்சை அளிப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் மோசமான வாழ்க்கை முறை ஆகியவை புற்றுநோய்க்கான முக்கிய காரணங்களாகும். மேலும், சில அன்றாடப் பழக்கங்களும் படிப்படியாக புற்றுநோய் அபாயத்தை அதிகரிக்கின்றன என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். அவற்றைப் பற்றி அறிந்துகொள்வது நல்லது. இதன் மூலம், அபாயகரமான சூழ்நிலைகளை மதிப்பிட முடியும்.

மேக்ஸ் மருத்துவமனையின் புற்றுநோய் நிபுணர் டாக்டர் ரோஹித் கபூர், புற்றுநோய் அபாயத்தை அதிகரிக்கும் அன்றாடப் பழக்கவழக்கங்கள் குறித்து விரிவாக விளக்கினார். புற்றுநோயின் அறிகுறிகள் பெரும்பாலும் கட்டியின் இருப்பிடம் மற்றும் அளவைப் பொறுத்தது. காரணமின்றி எடை குறைதல், தொடர்ச்சியான சோர்வு, காய்ச்சல், தோலின் கீழ் கட்டிகள் அல்லது வீக்கங்கள், தொடர்ச்சியான இருமல் மற்றும் குடல் பழக்கவழக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவை பொதுவான அறிகுறிகளாகும் என்று அவர் கூறினார்.

**புற்றுநோய் அபாயத்தை அதிகரிக்கும் அன்றாடப் பழக்கங்கள்**

**துரித உணவு பதப்படுத்தப்பட்ட உணவு:**

வாழ்க்கையின் பரபரப்பில், பலர் ஆரோக்கியமற்ற உணவுகளை உட்கொள்கின்றனர். துரித உணவு அவற்றில் ஒன்றாகும். துரித உணவுகளை அடிக்கடி சாப்பிடுவது ஆபத்தானது. இந்த உணவுகளில் உள்ள டிரான்ஸ் கொழுப்புகள் அழற்சி மற்றும் ஹார்மோன் சமநிலையின்மையை ஏற்படுத்துகின்றன. அவை பெருங்குடல் மற்றும் வயிற்றுப் புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கின்றன.

**உடற்பயிற்சி செய்யாதது:**

தினமும் உடற்பயிற்சி செய்வது அவசியம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். இருப்பினும், வாரத்திற்கு மூன்று முதல் நான்கு நாட்கள் கூட உடற்பயிற்சி செய்யாமல் இருப்பது உங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. உடற்பயிற்சியின்மை மற்றும் உடல் பருமன் இரண்டும் புற்றுநோய்க்கான மறைமுகமான காரணங்களாகும். உடல் செயல்பாடு இல்லாதது உங்கள் வளர்சிதை மாற்றத்தை மெதுவாக்குகிறது.

**அதிகப்படியான மது அருந்துதல்:**

நீங்கள் மிதமாக மது அருந்தினாலும் அல்லது அதிகமாக அருந்தினாலும், அது உங்கள் ஆரோக்கியத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இது கல்லீரல் புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கிறது. நீங்கள் மது அருந்தினால், இப்போதே அதை நிறுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள்.

**தூக்கமின்மை:**

போதுமான தூக்கம் இல்லாததும் புற்றுநோய்க்கான ஒரு ஆபத்துக் காரணியாகக் கருதப்படுகிறது. தூக்கமின்மை உடலின் செல் பழுதுபார்க்கும் செயல்முறையை பாதிக்கிறது. இது நோயெதிர்ப்பு மண்டலத்தைப் பாதிக்கிறது. பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்பு புற்றுநோய் அபாயத்தை அதிகரிக்கிறது.

**புற்றுநோயை தடுப்பது எப்படி?**

புற்றுநோயைத் தடுக்க சிறிய வாழ்க்கை முறை மாற்றங்களைச் செய்யுங்கள்.

குறைந்தது 7–8 மணி நேரம் தூங்குங்கள்.

மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறைக்கு மேல் துரித உணவுகளை சாப்பிட வேண்டாம்.

தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள்.



இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் 10,000 முகாம்கள் மூலம் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் மற்றும் 1.80 இலட்சம் புதிய பயனாளிகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டப் பயன்களை வழங்கி, "என் கனவு என் எதிர்காலம்" இணையதள சேவையைத் தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் மற்றும் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் ஆகியோர் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், மாவட்ட வருவாய் அலுவலர் வ. சங்கரநாராயணன் உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# மத்திய அரசின் பாரத் டாக்ஸி! 30% குறைந்த கட்டணத்தில் கார், ஆட்டோ, பைக் பயணம்..!






டெல்லி, பிப். 05–

ஓலா, உபர் போன்ற செயலிகளுக்கு போட்டியாக பாரத் டாக்ஸி செயலியை மத்திய கூட்டுறவுத் துறை இன்று (05.02.2025)அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த செயலி மூலம் கார், ஆட்டோக்களை இயக்கும் ஓட்டுநர்கள் பெறும் தொகையில் எந்த பிடித்தமும் (கமிஷன்) செய்யப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தில்லியில் பாரத் டாக்ஸி செயலியை மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா இன்று தொடங்கி வைத்தார்

முதல்கட்டமாக 2.5 லட்சம் வாகனங்கள் இந்த செயலியில் பதிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஓலா, உபர், ரேபிடோ செயலிகளைப் போலவே பாரத் டாக்ஸி செயலியிலும் பைக், ஆட்டோ மற்றும் கார்களை புக் செய்யலாம். உள்ளூர், வெளியூர் மற்றும் ரவுண்ட் டிரிப் வசதிகளும் உள்ளன.

**கமிஷன் கிடையாது**

பாரத் டாக்ஸியை பயன்படுத்தும் ஓட்டுநர்கள் கமிஷன் அடிப்படையில் இல்லாமல் அவர்களே உரிமையாளர்களாக உள்ளனர். வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறும் தொகையில் எந்த கமிஷனும் பிடித்தம் செய்யப்படாது.

அதற்கு பதிலாக செயலி பராமரிப்புக் கட்டணமாக ஓட்டுநர்கள் நாளொன்றுக்கு ரூ. 30 செலுத்தினால் போதும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

**30% வரை குறைந்த கட்டணங்கள்**

தற்போதுள்ள ஓலா, உபர் போன்ற செயலிகளை விட பாரத் டாக்ஸி 30 சதவீதம் குறைந்த கட்டணத்தில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியார் செயலிகள் ஒரு பயணத்துக்கு ரூ. 30 முதல் 50 வரை ஓட்டுநரிடமிருந்து கமிஷன் பெறுகிறார்கள். ஆனால், பாரத் செயலியைப் பயன்படுத்தும்போது அந்த கட்டணம் குறையும்.

**பாதுகாப்பு நடவடிக்கைகள்**

இந்த செயலியில் உள்ளமைக்கப்பட்ட பாதுகாப்பு அம்சங்களும், பிரத்யேக உதவி எண்ணும் உள்ளன. கூடுதலாக, பயணிகளின் புகார்களை விரைவாகத் தீர்க்க தில்லி காவல்துறையுடன் இணை ந்து 35 சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தளத்தில் உள்ள ஓட்டுநர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டிருக்கும்.

**வெற்றிகரமான முன்னோட்டம்:**

இந்த செயலி கடந்தாண்டு டிசம்பரில் தில்லி மற்றும் குஜராத்தில் சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த சோதனையில், நாள்தோறும் சராசரியாக 5,500 பயணங்களைப் பதிவு செய்தது. இதில் 4,000 விமான நிலையப் பயணங்களும் அடங்கும். மேலும், 1.4 லட்சத்துக்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள் ஏற்கனவே பதிவு செய்துள்ளனர். இந்த செயலி கூகுள் பிளே ஸ்டோர் மற்றும் ஆப்பிள் ஆப் ஸ்டோர் ஆகிய இரண்டிலும் கிடைக்கிறது.

# 6 தொகுதிகளை தேமுதிக ஏற்க மறுப்பது ஏன்?: ரிஷிவந்தியத்தில் போட்டியிட விரும்பும் பிரேமலதா!




சென்னை, பிப். 05–

தமிழகத்தில் 2005–ம் ஆண்டு புதிதாக தொடங்கப்பட்ட தே.மு.தி.க., 2006 சட்டசபை தேர்தல், 2009 நாடாளுமன்ற தேர்தலில் தனித்து போட்டியிட்டு குறிப்பிட்ட வாக்கு வங்கியை காட்டியதால், 2011–ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து எதிர்க்கட்சி அந்தஸ்துக்கு உயர்ந்தது.

அப்போது, எதிர்க்கட்சி தலைவரான விஜயகாந்த் உள்பட 29 பேர் தே.மு.தி.க. சார்பில் வெற்றி பெற்றிருந்தனர். ஆனால், 2016 சட்டசபை தேர்தலுக்குள் எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. தே.மு.தி.க. எம்.எல்.ஏ.க்கள் பலர் மாற்றுக்கட்சிக்கு சென்றனர்.

**2016 தேர்தலில் படுதோல்வி**

2016–ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் மக்கள் நலக்கூட்டணிக்கு தலைமை தாங்கிய தே.மு.தி.க. படுதோல்வி அடைந்தது. அதன்பிறகு இன்னும் எழுந்திருக்கவே முடியவில்லை.

இந்த நிலையில்தான், நடைபெறவுள்ள சட்டசபை தேர்தலில் வலுவான கூட்டணியில் பங்கேற்று போட்டியிட முடிவு செய்து, தி.மு.க., அ.தி.மு.க.வுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.


**அதிக தொகுதிகள் எதிர்பார்ப்பது ஏன்?**

தி.மு.க. கூட்டணியில் 6 தொகுதிகள் 1 ராஜ்ய சபா சீட் தருவதாகவும், அ.தி.மு.க. கூட்டணியில் 8 தொகுதிகள் தருவதாகவும் தே.மு.தி.க.விடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தி.மு.க.விடம் கூடுதல் தொகுதிகளை எதிர்பார்க்கும் தே.மு.தி.க., அ.தி.மு.க.விடம் ஒரு ராஜ்ய சபா சீட், ஒரு மத்திய மந்திரி பதவியை கூடுதலாக கேட்கிறது. தொகுதிகளை தே.மு.தி.க. எதிர்பார்க்க காரணம், அக்கட்சியில் பலர் போட்டியிட வாய்ப்பு கேட்கிறார்கள். 2011–ம் ஆண்டு எம்.எல்.ஏ.க்களாக இருந்த மோகன்ராஜ் (சேலம் தொகுதி), பார்த்தசாரதி (விருகம்பாக்கம்), வெங்கடேசன் (விழுப்புரம்), நல்லதம்பி (எழும்பூர்), சுபா (கெங்கவல்லி) ஆகியோர் மீண்டும் வாய்ப்பு கேட்கிறார்கள்.

**ரிஷிவந்தியத்தை விரும்பும் பிரேமலதா**

இதேபோல், கட்சியின் மாநில அவைத் தலைவர் இளங்கோவன், திருவள்ளூர் மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் போட்டியிட விரும்புகிறார்கள். இதுபோக, பிரேமலதா விஜயகாந்த், அவரது மகன் விஜய் பிரபாகரன், அவரது சகோதரர் எல்.கே.சுதீசும் தேர்தல் களம் காண்பார்கள் என்பதால், தே.மு.தி.க.வுக்கு 10 தொகுதிகள் தேவைப்படுகிறது. ஆனால், எந்தக் கூட்டணியும் இதற்கு உடன்படாததால், முடிவு எடுக்க முடியாமல் தே.மு.தி.க. திணறுகிறது. அதே நேரத்தில், பிரேமலதாவும் விஜயகாந்த் 2–வது முறையாக போட்டியிட்டு வெற்றி பெற ரிஷிவந்தியம் தொகுதியில் போட்டியிட விரும்புகிறாராம்.

# அம்ரிதா உள்பட ராமேஸ்வரம் ரெயில்கள் நேரம் மாற்றம்! தெற்கு ரெயில்வே!!




சென்னை, பிப். 05–

06–02–2026 முதல், அம்ரிதா உள்பட ராமேஸ்வரம் செல்லும் ரெயில்கள் நேர மாற்றம் செய்யப்பட்டு உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவிப்பு வெளியிட்டு உள்ளது. அதன்படி மதுரை, திருச்சியில் இருந்து ராமேஸ்வரம் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் உள்பட சில ரயில்கள் நேரம் மாற்றப்பட்டு உள்ளது.

இதுதொடர்பாக தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தெற்கு ரெயில்வேயில் இயக்கப்படும் சில எக்ஸ்பிரஸ் மற்றும் பயணிகள் ரெயில்களின் கால நேர அட்டவணை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த மாற்றம் நாளை (வெள்ளிக்கிழமை) முதல் அமலுக்கு வருகிறது.

திருவனந்தபுரம் சென்டிரலில் இருந்து ராமேசுவரம் செல்லும் அமிர்தா எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்.16343), புதிய கால நேர அட்டவணைப்படி திண்டுக்கல் ரெயில் நிலையத்திற்கு காலை 8.05 மணிக்கும், மதுரைக்கு 9.20 மணிக்கும், மானாமதுரைக்கு 10.03 மணிக்கும், பரமக்குடிக்கு 10.23 மணிக்கும், ராமநாதபுரத்திற்கு 10.48 மணிக்கும், ராமேசுவரத்திற்கு மதியம் 12.15 மணிக்கும் சென்றடையும்.

திருச்சியில் இருந்து ராமேசுவரம் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (16849), புதிய கால நேர அட்டவணைப்படி திருச்சியில் இருந்து காலை 7.05 மணிக்கு புறப்படும் இந்த ரெயில் மானாமதுரைக்கு 9.40 மணிக்கும், பரமக்குடிக்கு 10.08 மணிக்கும், ராமநாதபுரத்திற்கு 10.38 மணிக்கும், உச்சிப்புளிக்கு 10.54 மணிக்கும், மண்டபத்திற்கு 11.09 மணிக்கும், பாம்பனுக்கு 11.19 மணிக்கும், ராமேசுவரத்திற்கு மதியம் 12.35 மணிக்கும் சென்றடையும்.

திண்டுக்கல்லில் இருந்து மதுரை செல்லும் பயணிகள் ரெயில் (56717), புதிய கால நேர அட்டவணைப்படி திண்டுக்கல்லில் இருந்து காலை 7.50 மணிக்கு புறப்படும் ரெயில் அம்பாத்துரைக்கு 8.01 மணிக்கும், கொடைக்கானல் சாலைக்கு 8.10 மணிக்கும், வாடிப்பட்டிக்கு 8.20 மணிக்கும், சோழவந்தானுக்கு 8.29 மணிக்கும், சமயநல்லூருக்கு 8.39 மணிக்கும், கூடல்நக ருக்கு 8.49 மணிக்கும், மதுரைக்கு காலை 9.10 மணிக்கும் சென்றடையும்.

ராமேசுவரத்தில் இருந்து மதுரை செல்லும் பயணிகள் ரெயில் (56714), புதிய கால நேர அட்டவணைப்படி ராமேசுவத்தில் இருந்து காலை 11.30 மணிக்கு புறப்படும் ரெயில் பாம்பனுக்கு 11.43 மணிக்கும், மண்டபத்திற்கு 11.53 மணிக்கும், உச்சிப்புளிக்கு மதியம் 12.10 மணிக்கும், வாலாந்தரவைக்கு 12.20 மணிக்கும், ராமநாதபுரத்திற்கு 12.39 மணிக்கும், சத்திரக்குடிக்கு 12.46 மணிக்கும், பரமக்குடிக்கு 1 மணிக்கும், சூடியூருக்கு 1.13 மணிக்கும், மானாமதுரைக்கு 1.40 மணிக்கும், ராஜகம்பீரத்திற்கு 1.52 மணிக்கும், திருப்பாச்சேத்திக்கு 2.02 மணிக்கும், திருப்புவனத்திற்கு 2.12 மணிக்கும், சிலைமானுக்கு 2.23 மணிக்கும், மதுரை கிழக்கு ரெயில் நிலையத்திற்கு 2.35 மணிக்கும், மதுரைக்கு மாலை 3.05 மணிக்கும் சென்றடையும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை Ph: 98659 88881


# வேலை வாய்ப்பு

## மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் - 13 காலிப்பணியிடங்கள்




Organization Name: CSIR CLRI, Central Leather Research Institute

Notification No: 01/2026

Job Category: Central Govt Jobs

Employment Type: Regular Basis

Total No of Vacancies: 13 MTS, JSA, Junior Stenographer Posts

Place of Posting: Chennai

Starting Date: 23.01.2026

Last Date: 02.03.2026

Apply Mode: Online

Official Website: https://clri.org/

## யு.பி.எஸ்.சி சிவில் சர்வீஸ் 2026 தேர்வு அறிவிப்பு; 933 காலிப்பணியிடங்கள் – விண்ணப்பிப்பது எப்படி?

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2026–ஆம் ஆண்டிற்கான சிவில் சர்வீஸ் தேர்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்ளிட்ட 933 பணியிடங்களுக்கான தேர்வுக்கு இன்று முதல் 24ம் தேதி வரை upsconline.nic.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்துள்ளது.

விண்ணப்ப அறிவிப்பு வெளியீட்டுடன், 2026–ம் ஆண்டு சிவில் சர்வீசஸ் தேர்வின் மூலம் நிரப்பப்படவுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை, தேர்வு முறை மற்றும் இதர விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. யு.பி.எஸ்.சி தேர்வு அட்டவணைப்படி, முதல்கட்ட தேர்வு மே.24ஆம் தேதியும், முதன்மைத் தேர்வு (Mains) ஆகஸ்ட் 21–ம் தேதியும் நடைபெற உள்ளது. இதனைத்தொடர்ந்து நேர்காணல் நடைபெறும்.

**முக்கியத் தேதிகள்:**

விண்ணப்பிக்கக் கடைசி நாள்: பிப்ரவரி 24, 2026.

முதற்கட்டத் தேர்வு (Prelims): மே 24, 2026.

முதன்மைத் தேர்வு (Mains): ஆகஸ்ட் 21, 2026 முதல் தொடங்கும்.

**காலிப்பணியிடங்கள் விவரம்:**

இந்த ஆண்டு மொத்தம் 933 காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் மாற்றுத்திறனாளிகளுக்காக (PwBD) 33 இடங்கள் ஒதுக்கப்பட்டு பள்ளன (பார்வையற்றோர் – 7, காதுகேளாதோர் – 11, உடல் ஊனமுற்றோர் – 8, பல்வகை மாற்றுத்திறனாளிகள் – 7).

**தகுதிகள் மற்றும் வயது வரம்பு:**

ஆகஸ்ட் 1–ஆம் தேதியன்று 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்; 32 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். எஸ்.சி/எஸ்.டி, ஓ.பி.சி மற்றும் முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு விதிகளின்படி வயதுத் தளர்வு உண்டு.

முயற்சிகள் (Attempts): * பொதுப் பிரிவு: 6 முறைகள்.

ஓ.பி.சி மற்றும் மாற்றுத் திறனாளிகள்: 9 முறைகள்.

எஸ்.சி/எஸ்.சி பிரிவினர்: எத்தனை முறையும் எழுதலாம்.

தேர்வு செய்யப்படும் பதவிகள்:

இந்தத் தேர்வின் மூலம் குரூப் 'A' மற்றும் குரூப்'B' பிரிவுகளில் உள்ள முக்கியப் பதவிகள் நிரப்பப்படுகின்றன. ஐ.ஏ.எஸ், ஐ.எஃப்.எஸ், ஐ.பி.எஸ், இந்தியத் தணிக்கை மற்றும் கணக்குத் துறை (IAAS), இந்திய வருவாய்ப் பணி (ஐ.ஆர்.எஸ்– வருமான வரி மற்றும் சுங்கவரி), ரயில்வே மேலாண்மைப் பணி (IRMS), பாதுகாப்பு எஸ்டேட் மற்றும் தகவல் சேவைகள், டெல்லி, அந்தமான் நிகோபார் உள்ளிட்ட யூனியன் பிரதேசங்களின் சிவில் மற்றும் காவல் பணிகள் (DANICS & DANIPS).

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பதாரர்கள் முதலில் upsconline.gov.in என்ற இணையதளத்தில் 'ஒற்றை முறை பதிவு' (One Time Reg–istration – ஓ.டி.ஆர்) செய்ய வேண்டும். ஏற்கனவே பதிவு செய்தவர்கள் நேரடியாகத் லாகின் செய்து விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யலாம். கூடுதல் விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ இணையதளத்தைப் பார்வையிடலாம். தற்போது 2025–ம் ஆண்டுக்கான நேர்முகத் தேர்வுகள் டெல்லியில் உள்ள யு.பி.எஸ்.சி தலைமையகத்தில் நடைபெற்று வருகின்றன. நேர்முகத் தேர்வுக்கு மொத்தம் 275 மதிப்பெண்கள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.



ராமநாதபுரம் மாவட்டம் திருஉத்தரகோசமங்கையில் திருப்புல்லாணி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செல்லத்துரை ஏற்பாட்டில் அதிமுக கழக பொதுச்செயலாளரும் எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே பழனிசாமி அறிவித்துள்ள தேர்தல் வாக்குறுதிகளை துண்டு பிரசுரங்கள் மூலம் பொது மக்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி ராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் எம்.ஏ.முனியசாமி தலைமையில் நடைபெற்றது . கழக எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் ஆர்.ஜி.ரத்தினம் விருதுநகர் மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் சரவணக் குமார் மாவட்ட பொருளாளர் குமரவேல் உட்பட கழக நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.




# 2-வது நாளாக தொடர்ந்த போராட்டம் டாஸ்மாக் பணியாளர்கள் மீண்டும் கைது!

சென்னை, பிப். 05–

இரண்டாவது நாளாக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி டாஸ்மாக் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட முயன்ற பணியாளர்களை காவல்துறையினர் மீண்டும் கைது செய்தனர். பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம், இ.எஸ்.ஐ.திட்டம் அமல்படுத்துதல், காலி பாட்டில்களை திரும்ப பெறும் திட்டம் அமுல்படுத்துவதற்கு தனியாக பணியாளர்கள் நியமனம் செய்ய வேண்டும் உள்ளிட்ட டாஸ்மாக் பணியாளர்களின் பல்வேறு



கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கத்தினர் (ஏஐடியுசி) கடந்த 3ம் தேதி முன்தினம் போரட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து பேரணியாக சென்று கோட்டையை முற்றுகையிட முயன்றவர்களை காவல்துறையினர் கைது செய்தனர். இந்நிலையில் தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்றைய தினம் மீண்டும் டாஸ்மாக் பணியாளர்கள் சங்கத்துடன் (ஏஐடியுசி) இணைந்து தமிழ்நாடு விற்பனையாளர் நல சங்கம், விடுதலை சிறுத்தைகள் பணியாளர் சங்கத்தினர் எழும்பூரில் உள்ள டாஸ்மாக் தலைமையகம் அருகே போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் டாஸ்மாக் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட முயன்ற போது காவல்துறையினர் அவர்களை கைது செய்தனர்.

# கரூர் சம்பவம்; சிபிஐ குற்றப்பத்திரிகை! விஜய் பெயருமா?

கரூர், பிப். 05–

கரூர் வழக்கு திருச்சி தலைமை குற்றவியல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டது. இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் பணியில் சிபிஐ அதிகாரிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். வரும் 12ம்தேதிக்குள் திருச்சி தலைமை குற்றவியல் நீதிமன்றம் அல்லது மதுரை, டெல்லி சிபிஐ நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.



இதில் விஜய் மற்றும் புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சி.டி.நிர்மல் குமார், மதியழகன் ஆகியோரது பெயரும் இடம்பெறும் என்று கூறப்படுகிறது.

இதன் மூலம் கரூர் கூட்ட நெரிசல் வழக்கு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக சிபிஐ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

*** தேர்தல் நேரத்தில் நெருக்கடி**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ள நிலையில், திமுக, அதிமுக உள்ளிட்ட அரசியல் கட்சிகள் கூட்டணி பேச்சுவார்த்தைகளில் தீவிரம் காட்டி வருகின்றன. இந்த நிலையில் விஜய் இதுவரை எந்த கூட்டணியிலும் இணைவதை அறிவிக்காத சூழலில், பாஜ அவரை தன் பக்கம் இழுக்க முயற்சி மேற்கொண்டு வருவதாக பேசப்படுகிறது. தேர்தல் காலத்தை முன்னிட்டு அவசர அவசரமாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுவதன் மூலம் விஜய்க்கு அரசியல் மற்றும் சட்ட நெருக்கடிகள் உருவாக வாய்ப்பு இருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் தகவல் வெளியாகியுள்ளது.

# தமிழகத்தில் தேர்தலுக்கு பின் சொத்துவரி ஆறு சதவீதம் உயர்வு?

சென்னை, பிப். 05–

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில், சொத்து வரி வசூலிக்கப்பட்டு வருகி றது . கடந்த, இரண்டா யிரத்து இருபத்து இரண்டாம் ஆண்டில், சொத்து வரி இரட்டிப்பாக உயர்த்த ப்பட்டது.



அதேபோல், பதினைந்தாவது நிதி ஆணைய பரிந்துரைப்படி, ஆண்டு தோறும், ஆறு சதவீதம் சொத்துவரி உயர்த்தும் நடைமுறையை, இரண்டாயிரத்து இருபத்து நான்கில் தமிழக அரசு அமல்படுத்தியது

அதன்படி, ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர் முதல் சொத்துவரி உயர்த் தப்பட வேண்டும் . ஆனால், வரும் சட்டசபை தேர்தலை கருத்தில் வைத்து, இரண்டாயிரத்து இருபத்து ஐந்தாம் ஆண்டில், ஆறு சதவீத சொத்து வரி உயர்வை, தமிழக அரசு நிறுத்தி வைத்தது. அதேநேரம், தேர்தல் முடிந்த பின், சொத்து வரி உயர்வை அமல்படுத்த, அறிவுறுத்தி உள்ளது

இது குறித்து, உள்ளாட்சி அமைப்புகளின், வருவாய் துறை அதிகாரிகள் கூறியதாவது: – சென்னை மாநகராட்சியை பொருத்த வரை, நிதியாண்டுக்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது . கடந்த ஆண்டு ஆறு சதவீத வரி உயர்வு நிறுத்தி வைப்பால், அறுபது லட்சம் ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது . இவ்வாறு அவர்கள் கூறினர்

# தங்கம் விலை ஏற்ற, இறக்கத்தால் விற்பனை மந்தம்: நகை உற்பத்தி பாதிப்பால் முடங்கிய பட்டறைகள்!

கோவை, பிப். 05–

தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால், வாங்குபவர்களின் மத்தியில் ஒரு அச்சத்தை ஏற்படுத்தி விற்பனை மந்தமாகி உள்ளது. நகை, ஏற்ற இறக்கத்தால் வழக்கமான விற்பனையை விட 70 சதவீதம் குறைந்துள்ளது. நகை வியாபாரம் குறைந்ததால் தயாரிப்புக்கான ஆர்டரும் குறைந்துள்ளது.

போதிய ஆர்டர்கள் இல்லாமல் தங்க நகை பட்டறைகள் வெறிச்சோடி காணப்படுகின்றன. இதனால் இந்த தொழிலை நம்பியுள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்கள் போதிய வேலை வாய்ப்பு இல்லாமல் உள்ளனர். வேலையிழப்பு காரணமாக கோவையை சேர்ந்த தொழிலாளர்கள் மட்டுமல்லாமல் வட மாநிலத்தை சேர்ந்தவர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருந்த நிலையில் அவர்களும் சொந்த ஊர்களுக்கு திரும்பியுள்ளனர்.



இதுகுறித்து நகைப்பட்டறை உரிமையாளர்கள் கூறியதாவது:–

தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கத்தின் காரணமாகவே ஆர்டர்கள் குறைந்துள்ளன. முன்பு ஒரு மாதத்திற்கு கிலோ கணக்கில் தங்க நகைகளை உற்பத்தி செய்து கொடுத்து வந்த நிலையில், தற்போது மிகவும் குறைந்த ஆர்டர்கள் வருகின்றன. இதனால் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க முடியாத நிலை உள்ளது. ஒரு நகைப்பட்டறையில் 10 பேர் வேலை செய்த நிலையில், தற்போது 4 பேர் மட்டுமே வேலை செய்கின்றனர்.

அவர்களுக்கும் முறையாக வேலை தர முடிவதில்லை. போதிய வருமானம் இல்லாததால் பலரும் வேறு வேலைக்கு செல்ல தொடங்கியுள்ளனர். ஒவ்வொரு நாளும் தங்கம் விலை உயர்வதாலும் நகை வாங்குபவர்கள் தயங்குகின்றனர். மேலும் மக்களின் தங்கம் வாங்கும் திறன் குறைந்து வருகிறது. தங்கம் தொடர் விலையேற்றம் கண்டு வந்தால், தங்க நகை பட்டறைகள் வேலை இன்றி படிபடிப்பாக மூடப்படும் சூழல் உருவாகும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# தேர்தல் நேரத்தில் தள்ளுபடி அறிவிப்பு வெளியாக வாய்ப்பு: கூட்டுறவு வங்கியில் கடன் வாங்க பொதுமக்கள் ஆர்வம்!

சென்னை, பிப். 05–

தமிழ்நாட்டில் 22,500–க்கும் மேற்பட்ட கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இந்த சங்கங்களின் கீழ், 4,474 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளும், 23–க்கும் மேற்பட்ட மாவட்ட




மத்திய கூட்டுறவு வங்கிகளும், 1,454–க்கும் மேற்பட்ட நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளும் செயல்பட்டு வருகின்றன.

இந்த கூட்டுறவு வங்கிகள் மூலம் பயிர் கடன், நகை கடன், சுய உதவிக்குழு கடன், மாற்றுத்திறனாளி கடன், வாகன கடன் உள்பட பல்வேறு வகையிலான கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**தேர்தல் நேர அறிவிப்பு**

இதில், பயிர், கால்நடை வளர்ப்பு, மாற்றுத்திறனாளி உள்ளிட்ட பிரிவுகளில் வாங்கப்படும் கடன்களை குறிப்பிட்ட காலத்திற்குள் அடைத்துவிட்டால், 7 சதவீத வட்டி முழுமையாக தள்ளுபடி செய்யப்படுகிறது. மற்ற வகை கடன்களுக்கான வட்டி 9 சதவீதம் என்ற அளவில் தொடர்கிறது.

இந்த நிலையில், தமிழகத்தில் அடுத்த 2 மாதத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. கடந்த காலங்களில் தேர்தல் நேரத்தின்போது ஆளுங்கட்சியும், ஆண்ட கட்சியும், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கூட்டுறவு வங்கிக் கடனை தள்ளுபடி செய்வோம்" என்று வாக்குறுதி அளிப்பதும், ஆட்சிக்கு வருபவர்கள் அதை நிறைவேற்றுவதும் நடந்திருக்கிறது. ஒருசில நேரங்களில் அது நடைபெறாமலும் போய் இருக்கிறது.

**எடப்பாடி பழனிசாமி வாக்குறுதி**

தற்போது எதிர்க்கட்சி தலைவரான எடப்பாடி பழனிசாமி, "அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் கூட்டுறவு வங்கிகளில் வாங்கப்பட்ட மாற்றுத்திறனாளி கடன், சிறுபான்மையினர் கடன் தள்ளுபடி செய்யப்படும்" என்று வாக்குறுதி அளித்துள்ளார். ஆளுங்கட்சியான தி.மு.க.வும் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அதிலும், கூட்டுறவு வங்கிக் கடன் தள்ளுபடி குறித்த அறிவிப்பு நிச்சயம் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வங்கிக் கடன் அதிகரிப்பு**

இந்த நிலையில், கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்குவோர் எண்ணிக்கை அதிகரிக்க தொடங்கியிருக்கிறது.

கடந்த 2024–ம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் மாதம் வரை ரூ.72 ஆயிரம் கோடியாக இருந்த கூட்டுறவு வங்கிக் கடன், 2025–ம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் மாத காலக்கட்டத்தில் ரூ.83 ஆயிரம் கோடியாக அதிகரித்துள்ளது. அதாவது, ரூ.11 ஆயிரம் கோடி அதிகரித்து இருக்கிறது. தேர்தல் நேரத்தில் கூட்டுறவு கடன் தள்ளுபடி அறிவிப்பு வெளியாகும் என்ற நம்பிக்கையில் பொதுமக்கள் ஆர்வத்துடன் கடன் வாங்கியதை இது காட்டுகிறது.

# விஜய்யையும் தவெகவையும் நான் இன்னும் அடிக்கவே ஆரம்பிக்கவில்லை: அண்ணாமலை!

சென்னை, பிப். 05–

தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை இன்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:



"விஜய்யையும் தவெகவினரையும் நான் இன்னும் அடிக்க ஆரம்பிக்கவில்லை. ஏனென்றால், தமிழ்நாடு அரசியலில் என்னுடைய பேச்சை மாற்றிப் பேசும் ஆள் நான் இல்லை. விஜய் பற்றி முதல் நாள் சொன்ன கருத்தைத்தான் இன்றும் சொல்கிறேன். அரசியலுக்கு புதியவர்கள் வரவேண்டும். எங்களோடு கூட்டணிக்கு வரவில்லை என்பதற்காக நான் மாற்றி எல்லாம் பேச மாட்டேன். அவருடைய பாதையில் அவர் போகட்டும்.

அதே நேரத்தில் 'இந்த டப்பா என்ஜின்' என்பதற்கு பதிலடியை நான் கொடுத்துவிட்டேன். அதே நேரத்தில் தவெகவோ, விஜய்யோ கட்சியில் இருக்கும் அல்லு சில்லுகளை வைத்து வம்பு இழுத்தார் என்றால், என்னுடைய பதிலும் கடுமையாக இருக்கும். அதே அளவுக்கு நானும் போவேன்.

நாகரீகமான அரசியல் என்று விஜய் சொன்னதால் என்னுடைய பதிலும் நாகரீகமாக உள்ளது. இரண்டாம் கட்ட தலைவர்கள், நான்கு கட்சி மாறி வந்தவர்களை வைத்துக்கொண்டு தரம் தாழ்ந்து விமர்சித்தால், அதே பாணியில் அதைவிட சிறப்பாக எனக்கு பதில் சொல்லத் தெரியும். ஆனால் அது வேண்டாம் என்று நான் நினைக்கிறேன். அரசியல் களம் நாகரீகமாக இருக்கட்டும். அவருடைய பாதையில் அவர் போகட்டும்.

ஏற்கனவே நான் சொன்னது போல, தமிழக வாக்காளர்கள் ஏப்ரல் மாதத்தில் வரும் தேர்தலில் அவர்களுடைய எண்ணத்தில் இருப்பதை பிரதிபலிப்பார்கள். அதுவரை காத்திருப்போம். தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறோம். தவெகவினர் இதை ஒரு எச்சரிக்கையாக கூட எடுத்துக்கொள்ளட்டும்." இவ்வாறு அவர் பேசினார்.

# கூட்டணியை இறுதி செய்யாத திமுக, அதிமுக: தொகுதி பங்கீடு பேச்சு எப்போது...?

சென்னை, பிப். 05–

தமிழக சட்டசபை தேர்தல் நெருங்கி வருவதால் அரசியல் கட்சிகள் தங்களது களப்பணியை தீவிரப்படுத்தியுள்ளன. ஏப்ரல் 3–வது வாரத்தில் சட்டசபை தேர்தல் நடக்கலாம் என்ற தகவலும் ஒரு பக்கம் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

தற்போதைய சூழ்நிலையில் தி.மு.க., அ.தி.மு.க., நாம் தமிழர், த.வெ.க. என 4 முனை போட்டி இருக்கலாம் என்ற கருத்து உருவாகியுள்ளது. தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள்,




கம்யூனிஸ்டு கட்சிகள், ம.தி.மு.க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன.

அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜனதா, பா.ம.க. (அன்புமணி), அ.ம.மு.க., த.மா.கா. உள்ளிட்ட கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. நாம் தமிழர் கட்சி தனித்து களம் காண்கிறது. புதிதாக களத்துக்கு வந்துள்ள விஜய் தலைமையிலான த.வெ.க.வும் ஒரு கூட்டணியை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் எந்த கூட்டணியில் சேரலாம் என்ற யோசனையில் தே.மு.தி.க., பா.ம.க. (டாக்டர் ராமதாஸ்), புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் இருந்து வருகின்றன. இந்த கட்சிகள் இன்னும் தங்கள் முடிவை அறிவிக்கவில்லை. இந்த பட்டியலில் முன்னாள் முதல்–அமைச்சர் ஓ.பன்னீர்செல்வமும் இருந்து வருகிறார்.

தே.மு.தி.க., பா.ம.க. (டாக்டர் ராமதாஸ்) ஆகிய கட்சிகளை தங்கள் அணியில் இணைத்துக்கொள்ள மறைமுக பேச்சுவார்த்தையை தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க. ஆகிய கட்சிகள் தொடங்கியுள்ளன. டாக்டர் ராமதாசும், பிரேமலதாவும் தங்களது நிலைப்பாட்டை அறிவிக்காததால், இருபெரும் கட்சிகளாக தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் தங்களது கூட்டணியை இறுதி செய்யாமல் இருக்கின்றன.

தேர்தல் அறிக்கை குழு, பிரசார குழுக்களை தி.மு.க., அ.தி.மு.க. அறிவித்தபோதிலும் கூட்டணியை இறுதி செய்யவில்லை. மேற்கண்ட அந்த கட்சிகள் எடுக்கும் முடிவை பொறுத்து கூட்டணியை இறுதி செய்ய தி.மு.க, அ.தி.மு.க. திட்டமிட்டுள்ளது. கூட்டணியை இறுதி செய்த பிறகே, தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை தி.மு.க, அ.தி.மு.க. நடத்த உள்ளது. தி.மு.க.வில் காங்கிரஸ் கட்சியுடனான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை தள்ளி போய் இருக்கிறது.

அ.தி.மு.க.விலும் அதிகாரப்பூர்வமாக தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கப்படவில்லை. அனேகமாக அடுத்த வாரம் கூட்டணிகள் முடிவாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தைகளை இருபெரும் கட்சிகளும் தொடங்கும் என்று அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

# பிரதமர் மோடி பிப். 7-ல் மலேசிய பயணம்!




புதுடில்லி, பிப்.05–

இரண்டு நாள் அரசு முறை பயணமாக, பிரதமர் மோடி பிப்.,7ல் மலேசியா செல்கிறார்.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை:

பிரதமர் மோடி, மலேசியாவுக்கு மேற்கொள்ளும் 3வது பயணம்இது.2024–ஆகஸ்டில் இந்தியா– மலேசியா இடையிலான இருதரப்பு உறவில் வலுவான நிலைக்கு உயர்த்தப்பட்ட பிறகு மோடி மேற்கொள்ளும் முதல் பயணமாக இது அமைகிறது.

இந்தப் பயணத்தின் போது, பிரதமர் மோடி மலேசியப் பிரதமர் அன்வர் இப்ராஹிமுடன் உயர்மட்டப் பேச்சு நடத்த உள்ளார். இதில் பாதுகாப்பு, டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகம் குறித்து ஆலோசிக்கப்படும். பயணத்தின் ஒரு பகுதியாக 10–வது இந்தியா––மலேசியா தலைமைச் செயல் அதிகாரிகள் (CEO) சந்திப்பு நடைபெற உள்ளது. இதில் இரு நாட்டு தொழில் அதிபர்களும் பங்கேற்பார்கள்.

மலேசியாவில் வாழும் இந்திய சமூகத்தினர், வணிகப் பிரதிநிதிகளுடனும் மோடி உரையாற்ற உள்ளார்.

பிரதமர் மோடியின் பயணமானது, ஆசிய நாடுகளுடனான உறவை வலுப்படுத்துவதில் மிக முக்கியக் கட்டமாகக் பார்க்கப்படுகிறது.

இவ்வாறு வெளியுறவு அமைச்சக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# அதிரடியாக குறைந்த தங்கம், வெள்ளி விலை!


சென்னை, பிப். 05–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.4,640 குறைந்து ரூ.1,14,560–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.580 குறைந்து ரூ.14,320–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை தொடர்ந்து வெள்ளி விலையும் இன்று குறைந்தது. வெள்ளி விலை இன்று கிராமுக்கு ரூ.20 ரூபாய் குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.300–க்கும் பார் வெள்ளி 3 லட்ச ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# சபரிமலையில் நெய் மோசடி விவகாரம் - திருவிதாங்கூர் தேவஸ்தான அதிகாரி கைது!






திருவனந்தபுரம், பிப். 05–

சபரிமலை ஐயப்பன் கோவிலில் நெய் விற்பனையில் மோசடி நடந்ததாக புகார் எழுந்தது. இதுதொடர்பாக கேரள ஐகோர்ட்டின் உத்தரவின் பேரில் ஊழல் தடுப்பு பிரிவு போலீசார் விசாரணையை தொடங்கினர். இதையடுத்து கடந்த மாதம் 16–ந் தேதி சபரிமலையில் அதிகாரிகள் நேரில் ஆய்வு நடத்தி ஆவணங்களை சரிபார்த்தனர். அப்போது, நெய் விற்பனையில் மோசடி நடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது 100 கிராம் அளவுள்ள 13 ஆயிரத்து 679 பாக்கெட் நெய் விற்பனை செய்யப்பட்டு திருவிதாங்கூர் தேவஸ்தான கருவூலத்திற்கு வர வேண்டிய ரூ.13 லட்சத்து 67 ஆயிரத்து 900 மோசடி செய்யப்பட்டது தெரியவந்தது. நெய் விற்பனை மோசடி தொடர்பாக உதவி அர்ச்சகர்கள் உள்பட 33 பேர் மீது ஊழல் தடுப்பு பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இதன் தொடர்ச்சியாக நெய் விற்பனை பொறுப்பில் இருந்த அதிகாரி சுனில்குமார் போற்றியை திருவிதாங்கூர் தேவஸ்தானம் ஏற்கனவே பணியிடை நீக்கம் செய்திருந்தது.

இந்த நிலையில் கேரள ஊழல் தடுப்பு பிரிவு போலீசார் நேற்று சுனில்குமார் போற்றியை கைது செய்தனர்.

## தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:

செல் : 7904806432

போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020